சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001.

தேதி: 26.05.2026.

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 107/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-9 |
| சாட்சியின் பெயர் | : | வீரபாண்டியன் |
| தந்தை பெயர் | : | துளசி |
| கிராமம் | : | கூத்தனூர் |
| தாலுக்கா | : | நன்னிலம் |
| மாவட்டம் | : | திருவாரூர் |
| தொழில் | : | விவசாயம் |
| வயது | : | 66 |

2026 ம் ஆண்டு மே மாதம் 26 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் பலகை எழுத்தர் நிலை-I ஆக பணிபுரியும் திருமதி.A.லதா அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

3 முதல் 6 மற்றும் 8 எதிரிகள் ஆஜர். 1ம் எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.

**முதல் விசாரணை**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்து போன நாவலன் என்பவரை எனக்கு தெரியும். அவர் மாக்சிஸ் கம்யூனிஸ்ட் கட்சியில் மாவட்ட செயர்குழு உறுப்பினர். விவசாய தொழிலாளர் சங்கத்தில் மாவட்ட செயலாளராக இருந்து வந்தார். அவர் தற்போது உயிருடன் இல்லை. கடந்த 19.01.2011 ஆம் தேதி இரவு 7.30 மணிக்கு நாவலன் படுகொலை செய்யப்பட்டு இறந்து போனார் என்று தகவல் வந்தது. அன்று இரவு 11.00 மணிக்கு நானும், நடராஜன் என்பவரும் கீழமாங்குடி கிராமத்திற்கு சென்றோம். அங்கு கீழமாங்குடி சங்கர் வீட்டில் நாவலன் மண்டையில் வெட்டப்பட்டு இரத்த வெள்ளத்தில் இறந்து கிடந்தார். அன்று இரவு 12.45 மணிக்கு நன்னிலம் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் நாவலன் படுகொலை செய்யப்பட்ட இடத்திற்கு வந்தார். என்னையும், நடராஜன் என்பவரையும் சாட்சியாக இருக்குமாறு கேட்டுக்கொண்டார். அந்த இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் தயார் செய்தார். அதில் எங்களிடம் கையொப்பம் பெற்றார். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான்.அந்த **பார்வை மகஜர் அ.சா.ஆ-2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. சம்பவ இடத்தில் நாவலன் விழுந்து கிடந்த இடத்திலிருந்து தரையை உடைத்து இரத்தம் படிந்த மண்ணை எடுத்தார்கள். அப்போது மகஜர் ஒன்றை தயார் செய்தார்கள். அதில் நானும், நடராஜன் என்பவரும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்ப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ-3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சம்பவ இடத்தின் அருகாமையில் இருந்த தெரு மின்விளக்கு அருகே கிடந்த நாட்டு வெடி

குண்டு -1 எடுத்தார்கள். அப்போது மகஜர் ஒன்றை தயார் செய்தார்கள். அதில் நானும், நடராஜன் என்பவரும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்ப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கு சம்மந்தாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>** - இல்லை-

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.05.26 15:38:40 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.